# தமிழ் இலக்கியப் பாடத்திட்டம்
# 2019
## உயர்நிலை

# LITERATURE IN TAMIL
## TEACHING AND LEARNING SYLLABUS 2019
## SECONDARY

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 3 |
| 2. | இலக்கியம் பயிற்றலின் நோக்கங்கள் | 7 |
| 3. | பாடத்திட்டப் பணிச்சட்டமும் இலக்கிய வகைமைகளும் | 9 |
| 4. | கற்றல் அடைவுநிலைகள் | 15 |
| 5. | கற்பித்தல் அணுகுமுறைகள் | 17 |
| 6. | மதிப்பீடு | 25 |

## இயல் 1

# அறிமுகம்

# இயல் 1

## 1.1 அறிமுகம்

சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். அது நம் குடியரசின் இருமொழிக் கல்விக் கொள்கைக்கிணங்க நம் பள்ளிகளில் தொடக்கநிலையிலிருந்து பல்கலைக் கழகப் புகுமுக நிலைவரை தாய்மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

## 1.2 தமிழ் இலக்கியப் பாடத்திட்டப் பணிச்சட்டம்




தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம்

இப்பாடக்கலைத்திட்டம் மாணவர்களை மையமாகக்கொண்டு வரையப்பட்டுள்ளது. இது மூன்று முக்கிய அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

- தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம்
- ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்
- அர்த்தமுள்ள மதிப்பீடு

### தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம்

இலக்கியம் பயிலும் மாணவர்களின் மொழித்தேர்ச்சியைக் கருத்திற்கொண்டு அவர்களின் மொழித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இப்பாடத்திட்டம் நெகிழ்வுத்தன்மைமிக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் இலக்கிய ஆர்வத்தைப் படிப்படியாக வளர்த்துத் தொடர்ந்து அவர்கள் அதன்மேல் ஈடுபாடு கொள்ளுமாறு இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பள்ளியில் மட்டுமன்றிப் பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும் இலக்கியத்தில் நாட்டம் செலுத்திப் பலதரப்பட்ட இலக்கியப் படைப்புகளைப் படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே வளர்க்க இது துணை புரியும்.

### ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்

பள்ளியிலும் பள்ளி வாழ்க்கைக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கம் மாணவர்களிடையே நிலைத்திருக்க உதவும் வகையில், இலக்கியம் கற்றல் நீடித்த சுகமான அனுபவமாக அமைதல் அவசியம். மாணவர்களின் தேவைகளையும் திறன்களையும் அறிந்து பல்வேறுபட்ட பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் இலக்கியம் கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவர். சிங்கப்பூர் மண்வாசனையுடனும் புத்துணர்வூட்டும் வகையிலும் இலக்கியப்பனுவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியம் கற்றல் வெற்றிபெற வேண்டுமாயின் இவ்விலக்கியப் பனுவல்களின் துணைகொண்டு உயிரோட்டமிக்க வகுப்பறைச் சூழலை ஏற்படுத்தி ஆர்வமூட்டும் வகையில் கற்பிக்க வேண்டும்.

### அர்த்தமுள்ள மதிப்பீடு

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக்கூடிய அர்த்தமுள்ள மதிப்பீடு இப்பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. முறைசாரா, முறைசார்ந்த மதிப்பீடுகளின்வழி மதிப்பீடு அமைதல் சிறப்பாகும். இதை மனத்திற்கொண்டு, மாணவர்களின் தேவைக்கேற்ப நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டமும் ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகளும் அர்த்தமுள்ள மதிப்பீடும் அமைந்திருக்கின்றன. இவை மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியர்கள் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் சூழலை உருவாக்கி ஊக்கமூட்டும் வகையில் கற்பித்தால் மாணவர்கள் இலக்கியம் கற்பதன்வழி அடையக்கூடிய பயன்களை நிறைவாகப் பெறுவர்.

## 1.3 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள்

21-ஆம் நூற்றாண்டில் மாணவர்களுக்கு அடிப்படை மொழித்திறன்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழி, எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் ஒருங்கே வளர்க்க வேண்டிய தேவை பெருகியுள்ளது. மாணவர்கள் இன்றைய வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள இத்திறன்கள் மிகவும் இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றன. இவற்றோடு ஏனைய 21-ஆம் நூற்றாண்டு நுண்திறன்களையும் இணைத்துக் கற்பிக்க வேண்டுவதும் அவசியமாகும். இவற்றைத் தனித்துக் கற்பிக்காமல் மொழிப்பாட நடவடிக்கைகளின் வாயிலாக ஒருங்கிணைத்துக் கற்பிப்பதே சிறந்தது.

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை இலக்கியப்பாடத்தில் இணைத்துக் கற்பிப்பதற்கு ஏதுவாக இப்பாடத்திட்டத்தில் பனுவல்களும் கற்பித்தல் முறைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கூடிக்கற்றல் அமைப்பு முறைகள், பிரச்சினை அடிப்படையிலான கற்பித்தல், படைப்பாக்கத்திறன் மேம்பாட்டிற்கான கற்பித்தல், பன்முனைப்பாங்குக் கற்பித்தல் முதலிய அணுகுமுறைகளும் இந்த 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை மாணவர்களிடையே வளர்த்திடப் பெருந்துணை புரிந்திடும். ஆசிரியர் வகுப்பறை நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வழிநடத்துகின்ற முறையைப் பொறுத்தே மாணவர்களின் திறன் அடைவுநிலை வளர்ச்சி அமையப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியக் கல்வியோடு நெருங்கிய தொடர்புடைய சில 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களும் அவற்றின்கீழ் அடங்கிய கூறுகளும் இங்கு வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளன.




## 1. குடியியல்சார் அறிவு, உலகளாவிய விழிப்புணர்வு மற்றும் பல்லினக் கலாசாரப் புரிந்துணர்வுத் திறன்கள்

- துடிப்பான சமூக அக்கறைகொண்ட வாழ்வை மேற்கொள்ளுதல், தேசிய, கலாசார அடையாளங்களைத் தெரிந்துகொண்டு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களைப் பெறுதல்.
- உலக நடப்புகளை அறிந்துகொள்வதில் அக்கறை காட்டுதல்.
- சமூகக் கலாசார உணர்வும் விழிப்புணர்வும் பெறுதல்.

## 2. நுண்ணாய்வுச் சிந்தனையும் புத்தாக்கச் சிந்தனையும்

- மாணவர்கள் தம் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, காரண காரியத்தோடு ஆராய்ந்து பேசுதல், பிரச்சினைகளுக்குத் தெளிவான முடிவெடுத்தல் முதலிய திறன்களைப் பெறுதல்.
- படைப்பாக்கத் திறனும் புதியனவற்றை அறிந்துகொள்ளும் முனைப்போடு அவற்றைப் பரிமாறிக் கொள்ளும் திறனும் மேம்படுதல்.

## 3. கருத்துப்பரிமாற்றம், உடனிணைந்து செயலாற்றுதல் மற்றும் தகவல் திறன்கள்

- பலதரப்பட்ட தகவல்களையும் கருத்துகளையும் பாரபட்சமின்றிப் பெற்றுக்கொண்டு தகவலறிவை வளர்த்துக்கொள்ளுதல்.
- தகவல்களைப் பெறும்போது இணையப் பாதுகாப்பைக் கவனத்திற்கொள்ளுதல்.
- பெறும் தகவல்களைப் பொறுப்புடன் பயன்படுத்த அறிதல்.
- பிறருக்குப் புரியும் வகையில் தகவல்களைப் பல வழிகளில் எடுத்துக்கூறும் திறன் பெறுதல்.

இயல் 2

# இலக்கியம் பயிற்றலின் நோக்கங்கள்

# இயல் 2

## 2.1 தமிழ் இலக்கியம் கற்றல், கற்பித்தலுக்கான நோக்கங்கள்

தமிழ் இலக்கியப் பாடம் (முழு/விருப்பப்பாடம்) கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- தமிழ் இலக்கியத்தில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் தொன்மையையும் சிறப்பையும் உணர்ந்து வாசிக்கச் செய்வது.
- இலக்கியப் படைப்புகளை நுண்ணாய்வுச் சிந்தனையோடு போற்றி மகிழ வழிகாட்டுவது
- தரமான இலக்கிய அறிவைப் பெறச்செய்து மாணவர்களது படைப்பாக்கத்திறனை விரிவுபடுத்திப் பல கோணங்களில் சிந்திக்கத் தூண்டுவது.
- தமிழில் உள்ள இலக்கிய வகைகளான கவிதை, கதை (நாவல், சிறுகதை), கட்டுரை முதலானவற்றைப் படித்தும் கேட்டும் பார்த்தும் அனுபவித்து மகிழ்தல்.
- இலக்கியத்தின் வாயிலாகப் பண்பாடு, விழுமியங்கள், நடப்பியல் செய்திகள் முதலியவற்றை அறிந்துகொள்ளுதல். அதன் மூலம் தம்மைப்பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் நல்ல புரிந்துணர்வைப் பெறுதல்.
- தாங்கள் படித்தும் கேட்டும் பார்த்தும் அனுபவித்ததைப் பற்றிய தமது புரிந்துணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துதல்.

## 2.2 இலக்கியப் பாடத்திட்டத்தின் பண்புகள்

இலக்கியப் பாடத்திட்டம் இரண்டு அடிப்படைப் பண்புகளைப் பெற்றுள்ளது. அவையாவன:

### நெகிழ்வுத்தன்மை

மாணவர்களின் வேறுபட்ட திறன்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பாடத்திட்டம் நெகிழ்வுடையதாய் இருத்தல் வேண்டும். அதாவது மாணவர்களின் பல்வேறு ஆர்வங்களுக்கு ஏற்ப மகிழ்வூட்டும் கற்றல் அனுபவங்களைத் தருவதாய் இலக்கியப்பாடம் அமைதல் வேண்டும்.

### பொருத்தமுடைமை

தனிமனித வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, தேசிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு இடமளிக்கும் வகையில் பொருத்தமான பாடப்பொருள்கள் தெரிவு செய்யப்பட்டு இலக்கியப் பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும்.

## இயல் 3

# பாடத்திட்டப் பணிச்சட்டமும் இலக்கிய வகைமைகளும்

# இயல் 3

## 3.1 தமிழ் இலக்கியத்திற்கான பாடத்திட்டப் பணிச்சட்டம்




### தமிழ் இலக்கியப் பணிச்சட்டத்தின் விளக்கம் கீழ்வருமாறு

**இலக்கியப் பனுவல்கள்:** இலக்கியப் பனுவலானது மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தி, பாடப்பொருளுணர்ந்து தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும்.

**ஐந்து திறன்கள்:** பூவிதழ்களின் வடிவில், ஐந்து திறன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் வழிகாட்டுதலோடு இலக்கியப் படைப்புகளைக் கற்கப்புகும் மாணவர்களின் இலக்கியத் திறன்கள் பூவைப் போன்று மலர்ந்து நாளும் மணம் வீசும்.

## I. இலக்கியப் பனுவலை அனுபவித்தல்

உலக இலக்கியங்களைப் பற்றிய புரிந்துணர்வை ஆழப்படுத்துவதோடு தாம் படித்தவற்றை அன்றாட வாழ்க்கையோடு தொடர்புபடுத்தவும் மாணவர்கள் அறிந்துகொள்வர்.

## II. வடிவமைப்பைப் போற்றுதல்

பல இலக்கியவகைகளையும் அவற்றின் கூறுகளையும் புரிந்துகொள்வதோடு, ஆசிரியர் படைப்பில் கையாண்டுள்ள குறிப்பிட்ட மொழிப்பயன்பாட்டின் நோக்கத்தையும் அது வாசகர்களிடையே ஏற்படுத்தும் தாக்கத்தையும் உணர்ந்துகொள்வர்.

## III. கருப்பொருளை உணர்ந்து கொள்ளுதல்

பனுவல்களில் வெளிப்படும் மையக்கருத்துகளையும் சிக்கல்களையும் ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து உலகளாவிய சிந்தனையைப் பெறுவர்.

## IV. கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்

இலக்கியப் படைப்பைக் குறித்துப் பேச்சு வழியாகவும் எழுத்துவழியாகவும் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் கலந்துரையாடவும் செய்வர்.

## V. இலக்கியப் படைப்புகளை உருவாக்குதல்

மாணவர்கள் சொந்தப் படைப்புகளை உருவாக்குபவர்களாகவும் தங்களுக்கெனத் தனித்துவமிக்க எழுத்துநடையைக் கொண்டவர்களாகவும் தங்களை வளர்த்துக்கொள்வர்.

## VI. கற்றல், கற்பித்தல் இலக்குகள்

கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவதே தமிழ் இலக்கியப் பாடத்திட்டத்தின் இலக்காகும்.

ஆசிய மொழிகள், தாய்மொழிகள், கலாசாரம், நம்பிக்கைகள், மதங்கள், விழுமியங்கள் முதலியவை பற்றிய ஆழ்ந்த புரிந்துணர்வுடைய ஆசிய **இலக்கியத் தகைமையாளர்களை உருவாக்குதல்.**

தாய்மொழி இலக்கியங்களில் உள்ள பலவகை இலக்கியப் படைப்புகளை ஆர்வத்துடன் வாசித்துப் புரிந்து போற்றும் தரமான இலக்கிய ஆற்றலும் **சிந்தனை வளமுடைய வாசகர்களை வளர்த்தல்.**

கற்பனைத்திறன்மிக்க இலக்கியப் படைப்புகளில் புத்தாக்கமிக்க மொழிநடைமூலம் அவர்களுடைய அனுபவரீதியான புரிந்துணர்வையும் பாரம்பரியத் தொடர்புகளையும் அறிந்த **புத்தாய்வுச் சிந்தனையுடைய படைப்பாளிகளை வளர்த்தல்.**

ஆசிய இலக்கியங்களில் உள்ள செழுமையான மரபுக்கூறுகளையும் அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளையும் அவற்றின் ஆழத்தையும் விடாமுயற்சி, நேர்மை, பொறுப்புணர்வு போன்ற இலக்கியங்கள் உணர்த்தும் விழுமியங்களையும் புரிந்துகொண்ட **நுண்ணாய்வுச் சிந்தனையுடையவர்களை** உருவாக்குதல்.

ஆசிய பிற இலக்கியங்கள் பற்றிய இலக்கியப்பார்வையும் பல கலாசாரங்களைப் பற்றிய விழிப்புணர்வும் ஒருங்கிணைந்த **உலகளாவிய பார்வையுடையவர்களை** உருவாக்குதல்.

## 3.2 இலக்கியம்

அறிவுசார் கருத்துகளையும் உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்த உதவும் கருவியே மொழியாகும். அம்மொழியைக்கொண்டு மக்களின் வாழ்க்கை முறைமைகளையும் அனுபவங்களையும் எடுத்தியம்ப உதவுவது இலக்கியமாகும். அது தான் தோன்றிய சமுதாயத்தின் மரபு, பண்பாடு, நாகரிகம், விழுமியங்கள் முதலானவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ உணர்த்தி நிற்கும். எனவே, இலக்கியமானது சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடி ஆகும்.

**இலக்கியத்திற்கு இன்றியமையாத கருத்து, உணர்ச்சி, கற்பனை, அழகிய வடிவம் ஆகிய இந்நான்கும் ஒருங்கே சிறந்து அமைதல் அரிது. மிகச்சிறந்த புலவரிடத்தில் நான்கும் ஒருங்கே சிறந்து அமைதல் உண்டு.**

**இலக்கியத்திறன் - பக்க எண் 79**

தம் உணர்ச்சியை வெளியிடும் விருப்பம்.
**(உணர்ச்சி)**

பிறர் வாழ்வில், அவர்தம் செயல்களில் தமக்குள்ள அக்கறை.
**(கருத்து)**

உண்மை உலகினையொட்டிக் கற்பனை உலகைப் படைப்பதில் உள்ள ஆர்வம்.
**(கற்பனை)**

எண்ணங்களுக்கு அழகிய வடிவம் தருவதில் உள்ள விருப்பம்.
**(வடிவம்)**

## 3.3 இலக்கிய வகைகள்

### பண்பாடும் விழுமியங்களும்

ஒருவரின் பண்பாட்டு அடையாளத்தையும் மரபுவழிப் பண்புகளையும் விழுமியங்களையும் உணர்த்த வல்லது இலக்கியம். மாணவர்களின் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வகையில் பண்பாட்டுக் கூறுகளையும் மரபுவழிப் பண்புகளையும் வலியுறுத்தும் வகையில் இப்பாடத்திட்டம் அமைந்துள்ளது. இலக்கிய வகைகளின் வாயிலாகவும் அனுபவக்கல்வி வழியாகவும் ஆசிரியர்கள் இக்கூறுகளை நெறிப்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

இலக்கியம் என்பது கவிதை, நாவல், சிறுகதை என்று பற்பல வகைமைகளை உள்ளடக்கியது.

## கவிதை இலக்கியம்

வாழ்க்கையின் நிகழ்வுகளையும் தனி மனித உணர்வுகளையும் சொற்களால் மிகச் செறிவாகப் பதிவு செய்யக் கவிதை இலக்கியம் பயன்படுகிறது. கைதேர்ந்த ஓவியன் போல், கவிஞன் தான் ரசித்தவற்றையும் அனுபவித்தவற்றையும் சொல்லோவியமாக வடிக்கிறான். அதுவே கவிதையாகப் பிறக்கிறது.

எல்லாரும் பயன்படுத்தும் சொற்களையே ஒரு கவிஞன் பயன்படுத்தினாலும் சொற்களின் இடையிலான அர்த்தங்களின் அடர்த்தியை ஒரு கவிஞனால் மட்டுமே தன் படைப்பாற்றலாலும் சொல் விளையாட்டாலும் கவிதையாகப் பிரதிபலிக்கச் செய்ய முடிகிறது.

### சங்கக் கவிதைகள் (மரபுக்கவிதைகள்)

சங்ககாலக் கவிதைகள் கருத்து வளமும் கற்பனைச் சிறப்பும் பெற்று மிளிர்பவை. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன், தமிழர் வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்புகளை விளக்குபவை சங்கக் கவிதைகள். ஓசை நயம், அடி வரையறை ஆகியவற்றுக்கு உட்பட்டு இலக்கண வரையறை மீறாமல் இயற்றப்பட்டவை மரபுக்கவிதைகள் ஆகும். மரபுக்கவிதை எழுதும் முறையை யாப்பிலக்கண நூல்கள் எடுத்துரைக்கின்றன.

**புறத்தே தோன்றும் காட்சிகளையும் அகத்தே தோன்றும் கருத்துகளையும் புனைந்து நிற்கும் அழகு ஓவியங்கள் என்பார் டாக்டர் மு.வரதராசனார்.**

### புதுக்கவிதைகள்

அறிவியல் மாற்றங்கள், உலகின் அவசரச் சூழல், தேவைகளின் விரைவுப் போக்கு, உலகத் தொழில் புரட்சிகள், போர்கள் முதலானவை உலக இலக்கியங்களின் பழைய மரபை மாற்றின. அவ்வகையில் கவிதையின் போக்கிலும் அளவிலும் புது மாற்றங்கள் விளைந்தன. அப்போதுதான் புதுக்கவிதை பிறந்தது. புதுக்கவிதையில் படிமம், குறியீடு, இருண்மை, தொன்மம் முதலான உத்திகள் கையாளப்படுகின்றன.

**ஒரு நாட்டுச் சூழலின் ஒவ்வொரு சமுதாய மாற்றமும் அந்நாட்டு இலக்கியங்களில் எதிரொலிக்கும்.**

கடுகு போன்ற சிறிய கவிதை வடிவத்துக்குள் உலகளாவிய கருத்துகள் செறிவுடன் இருப்பதே ஹைக்கூ கவிதைகள் ஆகும்.

### ஹைக்கூ கவிதைகள்

ஜப்பானில் தோன்றியதாகக் கூறப்படும் ஹைக்கூ கவிதைகள் மூன்றடிகளைக் கொண்டிருக்கும். மூன்றடிகளும் முறையே 5-7-5 என்னும் அமைப்பைக் கொண்டிருக்கும். மூன்றாவது அடி ஒரு திருப்பத்தினை உடையதாக இருக்கும். தமிழில் அமைந்த ஹைக்கூ கவிதைகள் சமூக விமர்சனத்திற்கும் சமூகக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்படலாயின.

## புனைகதை இலக்கியம்

**உரைநடையில் கதை கூறுவதே நாவல் எனப்படுகிறது.**

### நாவல்

உரைநடையில் எழுதப்படும் இந்த இலக்கிய வகை தமிழில் புதினம் என்றும் அழைக்கப்படுகிறது. நாவல் என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் புதுமை என்னும் பொருள் இருப்பதால் நாவலைப் புதினம் என்னும் பெயரிலும் தமிழறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆயினும், நாவல் என்னும் பெயரே பயன்பாட்டில் இன்றும் உள்ளது.

நாவல் இவ்வாறு தொடங்க வேண்டும், இவ்வாறு முடிய வேண்டும் என்ற விதிகள் எதுவும் இல்லை. ஆனால், நாவலில் கூறப்படும் நிகழ்ச்சிகளோ செய்திகளோ கட்டடத்தின் தூண்கள் போல் கதைக்கு இன்றியமையாதனவாக இருத்தல் வேண்டும் என்பார் டாக்டர் மு.வரதராசனார்.

### சிறுகதை

அன்றாடம் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளிலிருந்து உருவாவதே சிறுகதை. சிறுகதைக்கான கருப்பொருளைத் தனிமனிதச் சிக்கல், குடும்பச் சிக்கல், சமூகச் சிக்கல், முதலியவற்றிலிருந்து பெறலாம். சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை. சிறுகதையின் தொடக்கம் விறுவிறுப்பாக அமைந்து படிப்பவர்களுக்கு அதனைத் தொடர்ந்து படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தை ஊட்டும் வகையில் அமைதல் வேண்டும். சிறுகதையில் நடைத் தெளிவு, சிறந்த கதாபாத்திரப் படைப்பு, வடிவச் செம்மை முதலியவை சிறப்பாக அமைதல் வேண்டும். ஒரு கதாசிரியரை இன்னொரு கதாசிரியரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுபவை அவர் கையாளும் உத்திகளே ஆகும். சிறுகதைக்குத் தலைப்பு இன்றியமையாதது. அது வாசகர்களை ஈர்த்துப் படிக்கத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.




தொடக்கம், உச்சம், முடிவு என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது சிறுகதை. குதிரைப் பந்தயம் போலச் சிறுகதையின் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கவையாக இருத்தல் வேண்டும் என்பார் எல்லரி செட்ஜ்விக். சிறுகதை சிறப்பாக அமைய அதன் நடை மிகவும் முக்கியமானதாகும். நல்ல நடையானது படிப்பவரைக் கடைசி வரை சலிப்பூட்டாமல் தன்னோடு இழுத்துச் செல்ல வேண்டும் என்பார் பிளாபர் என்ற மேனாட்டுப் படைப்பாளி.

ஒவ்வோர் எழுத்துப் படைப்பிலும் இலக்கியத்தின் பயன்கள் நிரம்பியிருக்கின்றன. இலக்கியத்தோடு இயைந்து தம்மை வளப்படுத்திக்கொள்ளும் மாணவர்களே இலக்கியப் படைப்பாளிகளாக உருவெடுக்கிறார்கள்.

இயல் 4

# கற்றல் அடைவுநிலைகள்

# இயல் 4

## 4.1 கற்றல் அடைவுநிலைகள்

கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டே கற்பித்தலும் மதிப்பீடும் தீர்மானிக்கப்படுகின்றன. இக்காரணத்தால் கற்றல் விளைவுகள் கற்பித்தலையும் மதிப்பீட்டையும் இணைக்கும் பாலமாக இருப்பதோடு ஆசிரியர்களுக்குப் பயிற்றுகருவிகளின் உருவாக்கத்திலும் வழிகாட்டியாய்ப் பயன்படுகின்றன.

தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் உயர்நிலை நான்கு இறுதியில் கீழ்க்காணும் அடைவுநிலைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**அவையாவன:**

- தமிழ் இலக்கியத்தின் பல வடிவங்களான மரபுக்கவிதை, புதுக்கவிதை, நாவல், சிறுகதைகள் முதலியவற்றை அடையாளம் காணவும் அவற்றைப் போற்றவும் அறிந்திருத்தல்
- இலக்கியம் பற்றிய புரிந்துணர்வை ஆழப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையோடு ஒப்பிட்டு அறியும் திறனை அறிந்திருத்தல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் விழுமியங்களை அறிந்துகொண்டு போற்ற அறிந்திருத்தல்.
- படைப்பாக்கத்திறன் வெளிப்பாட்டிலும் கலைத்திறன் வெளிப்பாட்டிலும் இலக்கியத்தின் பங்கினைப் புரிந்துகொள்ளும் மாண்பினைப் பெற்றிருத்தல்.
- தமிழ் மரபையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதோடு தமிழ்மொழி தொடர்பான அறிவையும் ஆழப்படுத்துதல்.

இயல் 5

# கற்பித்தல் அணுகுமுறைகள்

# இயல் 5

## 5.1 கற்றல் வகைகள்

கற்பித்தல் என்பது ஒரு திறன் மட்டுமன்று; கலையுமாகும். கற்பித்தல் நோக்கங்களை நிறைவேற்றுதலே கற்பித்தலின் இலக்காகும். பாடப்பொருளுக்கும் எதிர்பார்க்கும் கற்றல் அடைவுநிலைகளுக்கும் ஏற்ப ஆசிரியர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளே கற்பித்தல் முறைகள் ஆகும்.

இலக்கியம் கற்றல் என்பது மாணவர்களுக்கு இனிய அனுபவமாக அமைய வேண்டும். அது வெற்றிபெற வேண்டுமாயின் துடிப்புமிக்க வகுப்பறைச் சூழலை உருவாக்கி ஆர்வமூட்டும் வகையில் கற்பித்தல் நடைபெற வேண்டும். கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய வகையில் அமைவது அவசியம்.




மாணவர்களின் தேவைகளையும் திறன்களையும் அறிந்து பல்வேறுபட்ட பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திமுறைகளைப் பயன்படுத்திக் கற்பித்தால் மாணவர்களைக் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்யமுடியும்.

## 5.2 கூடிக்கற்றல் அமைப்பு முறைகள் (Cooperative Learning Structures)

பல்வேறு கற்றல் பணிகளைச் சிறப்பாக வழிநடத்தக் கூடிக்கற்றல் அமைப்புமுறை உகந்ததாகும். இது மாணவர்கள் சிறு சிறு குழுநிலையில் இணைந்து செயற்பட உதவும் ஒன்றாகும். கூடிக்கற்றல் அமைப்புமுறைகள் மாணவர்களிடையே பல்வேறு திறன்களை வளர்க்கத் துணைபுரிகின்றன. எடுத்துக்காட்டாக, சுயமாகக் கற்கும் திறன், மற்றவர்களுடன் இணக்கமாகச் செயற்படும் திறன், சமூகத் திறன் முதலியவற்றை வளர்க்க இவை உறுதுணை புரிகின்றன. கூடிக்கற்றலின் ஐந்து அடிப்படைக்கூறுகள் கீழ்வருமாறு;

- **ஒருவர் மற்றொருவரைச் சார்ந்திருத்தல்**

குழுவிலுள்ள ஒவ்வொருவரின் வெற்றியும் தோல்வியும் குழுவினர் அனைவரையும் சார்ந்திருத்தல்.

- **நேருக்கு நேர் கருத்தாடல்**

கலந்துரையாடுதல், ஒன்றிணைந்து செயற்படுதல், திட்டமிடுதல் முதலிய பணிகளில் குழுவினர் துடிப்போடு பங்காற்றுதல்.

- **ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுக்கொள்ளுதல்**

குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் கற்றலுக்குப் பொறுப்பேற்றுக்கொள்வதோடு குழுவிலுள்ள மற்ற உறுப்பினர்கள் கற்பதற்கும் உதவுதல்.

- **சமூகத் திறன்கள்**

மாணவர்கள் குழுநிலையில் கலந்துரையாடவும் கருத்து வேறுபாடுகளுக்கு இணக்கமான முறையில் தீர்வு காணவும் இன்னபிற சமூகத் திறன்களையும் வளர்த்துக்கொள்ளல்.

- **குழுச் செயற்பாடு**

குழுவினர் ஒவ்வொருவரும் தத்தம் கற்றல் இலக்குகளைத் தனிப்பட்ட நிலையிலோ குழு நிலையிலோ எவ்வாறு அடையப் பெற்றனர் என்பதை மீள்நோக்கிப் பார்த்தல்.

### 5.2.1 பிரச்சினை அடிப்படையிலான கற்றல் (Problem-Based Learning)

பிரச்சினை அடிப்படையிலான கற்றல் அணுகுமுறைமூலம் மாணவர்கள் அடையும் பயன்கள் பற்பல. பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு கற்றல் நிகழும்போது மாணவர்கள் சுயமாகக் கற்க வாய்ப்புகள் அதிகம். மேலும், அவர்கள் தனித்து இயங்காமல் குழு நிலையில் செயற்படுவதால் மற்றவர்களுடன் இணைந்து செயற்படும் பண்பும் குழுவுணர்வும் மேம்படுகின்றன. ஆசிரியர் இந்த அணுகுமுறையில் ஒரு வழிகாட்டியாக மட்டுமே இருந்து மாணவர்களின் கற்றலுக்குத் துணைபுரிவார்.

பாடப்பனுவல்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் பனுவல்களிலுள்ள பிரச்சினையை மாணவர்களிடம் கொடுத்து அதற்குத் தீர்வு காணச் சொல்லும்போது, அவர்கள் மற்றப் பாடங்களையும் இதனுடன் தொடர்புபடுத்திக் கற்க வாய்ப்புண்டு. அதோடு பிரச்சினைக்கான தீர்வுகளைக் கண்டறிய அவர்கள் பல்வேறு வளங்களைப் பயன்படுத்தித் தகவல்களைத் திரட்டுவர். இதனால், மாணவர்கள் தங்கள்

சிந்தனையாற்றலை வளர்த்துக்கொள்வர். அவர்கள் வகுப்பறைக்கு அப்பால் உள்ள உலக நடப்புகளைப்பற்றிச் சிந்தித்துச் செயற்படப் பிரச்சினை அடிப்படையிலான கற்றல் அணுகுமுறை துணைபுரிகிறது.

**படிநிலைகள்:**

- பிரச்சினையை அடையாளம் கண்டு வரையறுத்தல்
- பிரச்சினையைப் புரிந்துகொள்ளத் தகவல்களைத் திரட்டுதல்
- திரட்டிய தகவல்களைப் பகுத்தாய்ந்து தீர்வுகளைப்பற்றிச் சிந்தித்தல்
- குழு நிலையில் பிரச்சினைக்கான தீர்வுகளைக் கண்டறிதல்
- தீர்வுகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்தல்
- தேர்ந்தெடுத்த தீர்வினைச் செயற்படுத்திப் பார்த்தல்
- ஏற்பட்ட விளைவுகளைப்பற்றிச் சிந்தித்தல்

### 5.2.2 கவிதைப் பாவனை (Poetic Action)

கவிதைப் பாவனை என்பது செய்யுள், கவிதைப் பகுதிகளைப் பொருளறிந்து படிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை ஆகும். மாணவர்கள் பாடப்பகுதிகளைக் குரல் ஏற்ற இறக்கத்துடன் படிக்க இது உதவும். மேலும், மாணவர்கள் திருக்குறள் போன்ற செய்யுட்பகுதிகளைப் பொருளறிந்து பயன்படுத்தவும் மனனம் செய்யவும் இது ஏற்ற நடவடிக்கையாகும்.

**படிநிலைகள் (முகமூடிகளைப் பயன்படுத்தவும்)**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். பின்னர், கவிதை வரிகளை ஒவ்வொரு குழுவிற்கும் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். கொடுக்கப்பட்ட பகுதியைப் பொருள் வெளிப்படும்படி மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்தும் நடித்தும் காட்டலாம்.

### 5.2.3 விவாதம்

இம்முறையில் மாணவர்கள் இரண்டிரண்டு பேராக இணைந்து விவாதத்திற்காகக் கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஆலோசிப்பர். பின்பு அவர்களது வாய்ப்பு வரும்போது மற்றக் குழுவுடன் விவாதிப்பர். மற்றொருவர் அடுத்த முறை கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு விடையளித்தல்.

### 5.2.4 பேட்டி காணுதல்

மாணவர்கள் தத்தம் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள இந்நடவடிக்கை வாய்ப்பளிக்கிறது. இதில் மூன்று படிநிலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு குழுவிலும் 4 மாணவர்கள் இருக்கலாம். ஒவ்வொரு குழுவிலும் மாணவர்கள் இரண்டிரண்டு பேர்களாக இணைந்துகொள்ள வேண்டும். ஒவ்வோர் இணையிலும் ஒருவர் பேட்டி காண்பவராகவும் மற்றவர் பேட்டி கொடுப்பவராகவும் பாத்திரமேற்க வேண்டும். அடுத்துத் தங்கள் பாத்திரத்தை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். இறுதியாக 4 மாணவர்களும் வரிசை வட்டக் கருத்துப்பரிமாற்றம் (Round Robin) என்னும் உத்தியை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் நடவடிக்கையின்போது தங்கள் கருத்துகளைப் பரிமாறிகொள்வர்

### 5.2.5 திங்க்-டெக்-டோ (Think-Tac-Toe)

இந்தக் கற்பித்தல் உத்தி டிக்-டெக்-டோ என்னும் விளையாட்டு முறையைப் பின்பற்றி அமைந்துள்ளது. மாணவர்களின் தயார்நிலை, கற்றல் பாணி, கற்றல் பின்புலம், நாட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்திக் கற்பிக்க இவ்வுத்தி வாய்ப்பளிக்கிறது. கதாபாத்திரம், கதைப்பின்னல், சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்கள் ஒவ்வொரு கட்டத்திலிருந்தும் ஒரு நடவடிக்கையைத் தேர்ந்தெடுத்து அவற்றில் ஈடுபடலாம்.

| | | | |
|---|---|---|---|
| **கதாபாத்திரம்** | உனக்குப் பிடித்த அல்லது பிடிக்காத கதாபாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து அவருடைய பண்புகளைப் பட்டியலிடு. | கதையில் வரும் கதாபாத்திரத்தின் குணநலன்கள் உன்னோடு எவ்வாறு ஒத்திருக்கின்றன அல்லது வேறுபடுகின்றன என்பதை ஒரு குறிப்பாக எழுது. | கதையில் வரும் முக்கியக் கதாபாத்திரத்தின் பண்புகளை ஒரு கவிதையாக எழுது. |
| **கதைப்பின்னல்** | கதைப்பின்னல் கதைக்குப் பொருத்தமாக இருக்கிறதா? எவ்வாறு? | கதைப்பின்னலுக்குப் பொருத்தமான மேற்கோள்கள் அல்லது செய்யுள்களைப் பட்டியலிட்டு எழுது. | கதைப்பின்னலுக்குப் பொருத்தமான இனிய தொடர்களை அல்லது திரைப்படப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் தொடர்பை விளக்கு. |
| **சூழல்** | கதையின் சூழலை முதலில் வரை. பின்னர், கதையின் சூழலை விவரிக்கும் வாசகங்களைக் கண்டுபிடித்து நீ வரைந்த படத்தின் அடியில் எழுது. | கதையின் சூழல் எவ்வாறு கதைக்கு முக்கியம் என்பதைச் சிந்தனை வரைபடமாக வரைந்து காட்டு. | கதாபாத்திரங்களும் கதையின் நிகழ்வுகளும் மாறக் கதையின் சூழல் எவ்வாறு கைகொடுக்கின்றது என்பதைக் கருத்துரு வரைபடத்தின்வழிக் காட்டு. |

### 5.2.6 பாத்திரப் பிரதிபலிப்பு (Role-on-the-wall)

ஒருவரின் பண்புநலன்களைப் பல கோணங்களிலிருந்து பார்த்துக் கருத்துத் தெரிவிக்க இந்த உத்தி பெரிதும் பயன்படும். ஆசிரியர் ஒரு கதாபாத்திரத்தின் உருவ வரைபடத்தை ஒரு பெரிய வெள்ளைத் தாளில் வரைந்து சுவரில் ஒட்டிவைக்க வேண்டும். மாணவர்கள் மற்றக் கதாபாத்திரங்களாகப் பாகமேற்று, தாளில் வரையப்பட்டுள்ள கதாபாத்திரத்தைப்பற்றிய தங்கள் கருத்துகளைத் தாங்கள் ஏற்ற பாத்திரத்தின் கண்ணோட்டத்திலிருந்து கூறுவர்.

(எ.கா) ஒரு நண்பர் என்ற நிலையிலிருந்து பேசும் மாணவர், அந்தக் கதாபாத்திரத்துக்காகப் பரிந்து பேசலாம். அந்தக் கதாபாத்திரத்தின் தரப்பில் உள்ள நியாயங்களை எடுத்துக் கூறலாம். கதை மாந்தர்களின் குணநலன்களை ஆராய இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### 5.2.7 முதன்மை இருக்கை (Hot - Seating)

மாணவர்கள் கேள்வி கேட்கவும், கேள்விக்கேற்ற பதில் கூறவும் இந்த உத்தியைப் பயன்படுத்தலாம். மாணவர்களை மூவர் கொண்ட குழுவாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். பின்னர், ஒரு நாற்காலியில் மாணவர் ஏற்க வேண்டிய பாத்திரத்தை ஆசிரியர் எழுதி ஒட்டி விடுவார்.

(எ.கா) ஆசிரியர் அரசர் என்று எழுதி, 'முதன்மை இருக்கை'யில் ஒட்டிவிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்த இருக்கையில் அமர்பவர் தம்மை அரசர் என்று கற்பனை செய்துகொள்ள வேண்டும். அவருக்கு எதிரில் அமர்ந்திருக்கும் இரு மாணவர்கள் அரசரைப் பேட்டி காண வேண்டும். பேட்டி காணும் மாணவர்கள் தங்கள் கேள்விகளைத் தயாரிக்க ஆசிரியர் நேரம் வழங்க வேண்டும். அது போல முதன்மை இருக்கையில் அமர்ந்து பதில் சொல்லவிருக்கும் அரசருக்கும் கேள்விகளுக்கேற்ற பதில்களைத் தயாரிக்க நேரம் வழங்கப்பட வேண்டும்.

## 5.3 பன்முனைப்பாங்குக் கற்பித்தல் (Multimodal Teaching)

மொழியியல், கட்புலன், செவிப்புலன், அசைவு, இடப்பரப்பு ஆகிய ஐந்து பாங்குகள் (Modes) தனித்த நிலையிலும் ஒருங்கிணைந்து பன்முனைப்பாங்கு நிலையிலும் கற்றல் நிகழ்கிறது. இன்றைய மின்னிலக்க உலகில் தகவல் தொழில்நுட்ப வசதிகளின்மூலம் கருத்துப்பரிமாற்றத்தை வெவ்வேறு நிலைகளில் மேற்கொள்ள முடியும்.

- **மொழியியல்வழிப் புரிந்துகொள்ளுதல்** (Linguistic Meaning)

  மொழியமைப்பின் கூறுகளான எழுத்து, சொல், தொடர் ஆகியவை உள்ளடங்கும்.

- **கட்புலன்வழிப் புரிந்துகொள்ளுதல்** (Visual Meaning)

  வண்ணம், உருவம், படங்களின்மூலம் வெளிப்படும் கருத்து / நோக்கு ஆகியவை உள்ளடங்கும்.

- **செவிப்புலன்வழிப் புரிந்துகொள்ளுதல்** (Audio Meaning)

  குரல், ஒலியின் அளவு, இசை ஆகியவை உள்ளடங்கும்.

- **அசைவுவழிப் புரிந்துகொள்ளுதல்** (Gestural Meaning)

  அசைவுகள், வேகம், முகபாவனை, உடல்மொழி ஆகியவை உள்ளடங்கும்.

- **இடப்பரப்புவழிப் புரிந்துகொள்ளுதல்** (Spatial Meaning)

  பொருள்களின் நெருக்கம், திசை, வைப்புமுறை ஆகியவை உள்ளடங்கும்.

- **பன்முனைப்பாங்கின்வழிப் புரிந்துகொள்ளுதல்** (Multimodal Meaning)

  மேற்கூறப்பட்டுள்ளனவற்றுள் இரண்டோ அதற்கும் மேற்பட்ட பாங்குகளைப் பயன்படுத்தியோ கருத்துப்பரிமாற்றத்தை மேற்கொள்ளுதல்.

## 5.4 படைப்பாக்கத் திறன் மேம்பாட்டிற்கான கற்பித்தல் (Teaching for Creativity)

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களில் ஒன்றான படைப்பாக்கத் திறனை மாணவர்களிடம் வளர்க்க இக்கற்பித்தல் அணுகுமுறை ஏதுவாக அமைகின்றது. மாணவர்களின் படைப்பாக்கத்தை வெளிக்கொணரும்படி பாடங்கள் அமையுமானால் ஈடுபாடுமிக்க கற்றல் நிகழும். இந்த அணுகுமுறையில் மூன்று படிநிலைகள் உள்ளன. அவை பின்வருவன:

- **ஊக்கமூட்டுதல்** (Encouraging)

  மாணவர்கள் தங்களிடம் படைப்பாக்கத் திறன் உள்ளது என்பதை உணர வேண்டும்.

- **அடையாளங்காணுதல்** (Identifying)

  தங்கள் படைப்பாக்கத் திறனை மாணவர்கள் சுயமாக அடையாளங்காண இலக்கியப் பனுவல்கள் உதவ வேண்டும்.

- **வலுச்சேர்த்தல்** (Fostering)

  தங்களுடைய படைப்பாக்கத் திறன் செயற்பாட்டைத் தாங்களே அனுபவத்தின்மூலம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### 5.4.1 படைப்பாக்கத் திறனை மேம்படுத்துவதற்கான அடிப்படைக் கூறுகள்:

- படைப்பாக்கத் திறனைத் தூண்டும் வகுப்பறைச் சூழல் (Creative Press)
- படைப்பாக்கத் திறன்மிக்க மாணவர் (Creative Person)
- படைப்பாக்கத் திறனுக்கான செயற்பாடு (Creative Process)
- படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்தும் படைப்பு (Creative Product)

முதலில் படைப்பாக்கத் திறனைத் தூண்டும் வகையில் வகுப்பறைச் சூழல் அமைய வேண்டும். அதிகக் கட்டுப்பாடு, மன உளைச்சல் முதலானவை இல்லாத சுதந்திரமான சூழல் இன்றியமையாதது. தடையற்றதும் நெகிழ்வுமிக்கதுமான வகுப்பறை, கற்பனையைத் தூண்டும் வகுப்பறையாக மாறும். அத்தகைய புறச்சூழல் மாணவர்களது படைப்பாக்கத் திறனை வெளிக்கொணர ஏதுவாக அமையும்.

மொழித்திறன் வளர்ச்சிக்கும் படைப்பாக்கத் திறன் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பினை ஆசிரியர் உணர்ந்து கற்பிப்பது இன்றியமையாததாகும். இது மாணவர்களை ஆர்வத்துடன் கற்கத் தூண்டுவதோடு புத்தாக்கத்திற்கும் தொழில்முனைப்பிற்கும் வலுச்சேர்க்கும் வகையில் அமையும்.

இயல் 6

# மதிப்பீடு

# இயல் 6

## மதிப்பீடு

மாணவரின் பலதரப்பட்ட தன்மைகளைப் பற்றித் தொடர்ச்சியாகத் தகவல்களைத் திரட்டுவதும், அம்மாணவரின் மேம்பாடு குறித்து கருத்துத்தெரிவிப்பை வழங்குவதும், வழிகாட்டுவதும் முழுமையான மதிப்பீடாகும். முழுமையான மதிப்பீடு கற்றலை வடிவமைக்கவும் செயற்படுத்தவும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதோடு தங்கள் செயல்முறைகளை மாற்றிக்கொள்ளவும் உதவுகிறது. இருபத்தோராம் நூற்றாண்டு வாழ்க்கைக்கும் பணிக்கும் தேவையான பலதரப்பட்ட திறன் வளர்ச்சியும் மனப்போக்கும் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க முழுமையான மதிப்பீடு உதவும்.

## 6.1 மதிப்பீட்டின் நோக்கம்

**மாணவர்களின் கற்றல்,ஆசிரியர்களின் கற்பித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதே மதிப்பீட்டின் முக்கிய நோக்கமாகும்.**

## 6.2 மதிப்பீட்டின் நடைமுறைக் கொள்கைகள்

- மதிப்பீடானது சரியான முறையில் அமைதல் வேண்டும்.
- மதிப்பீடு நம்பகமானதாக இருத்தல் வேண்டும்.
- மதிப்பீடு அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் சமமானதாகவும் இருத்தல் வேண்டும்.
- மதிப்பீடு கற்றல் விளைவுகளை நேரடியாக வெளிப்படுத்த வேண்டும்.

## 6.3 மதிப்பீட்டின் வகைகள்

மதிப்பீடு என்பது கற்றலுக்கான மதிப்பீடு (Assessment for Learning), கற்றலை மதிப்பிடுதல் (Assessment of Learning) என இருவகைப்படும்.

### கற்றலுக்கான மதிப்பீடு:

கற்றலுக்கான மதிப்பீடு இன்று உலகளவில் கல்வியாளர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்து வருகிறது. கற்பித்தலின்போது இம்மதிப்பீட்டை எல்லா நேரங்களிலும் பயன்படுத்த முடியும். கற்றலுக்கான மதிப்பீடு மாணவர்கள் எந்த அளவுக்குக் கற்றல் விளைவுகளை அடைந்திருக்கின்றனர் என்பதைக் காட்டக்கூடிய தன்மையுடையது. மேலும், இது மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் குறைக்கப் பெரிதும் உதவுகின்றது. கற்றலுக்கான மதிப்பீடு கற்பித்தலோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகவும் திகழ்கிறது.

**கற்றலுக்கான மதிப்பீட்டில் கருத்துத்தெரிவிப்பு மையமாக விளங்குகிறது. உரிய நேரத்தில் வழங்கப்படும் கருத்துத்தெரிவிப்பு மாணவர்களின் கற்றல் வளர்ச்சிக்குத் துணைபுரிவதோடு மாணவர்கள் தம் வளர்ச்சிநிலையைத் தெரிந்துகொள்ளவும், அவர்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டிய படிநிலைகள் குறித்து ஆலோசனை வழங்கவும் துணைபுரியும்.**

### கற்றலை மதிப்பிடுதல்:

கற்றலை மதிப்பிடுதல் என்பது பொதுவாகக் கற்றலுக்குப் பிறகு நடைபெறுகிறது. பாடத்திட்டத்திலுள்ள கற்றல் விளைவுகள் அடையப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள இது உதவுகிறது. அடுத்த நிலைக்குச் செல்லுதல், தர அளவைகளை வழங்குதல் முதலியவை கற்றலை மதிப்பிடுவதன் நோக்கங்களாகும்.

எந்த ஒரு மதிப்பீட்டு முறையும் முறைசார்ந்த மதிப்பீடு, முறைசாரா மதிப்பீடு ஆகிய இரண்டுக்கும் பயன்படும். இது மதிப்பீட்டின் நோக்கத்தைப் பொறுத்தே அமையும்.

## 6.4 கற்பித்தலும் மதிப்பீடும்

கற்பித்தலும் மதிப்பீடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை தனித்தனியே இயங்குவதில்லை. கற்றல் கற்பித்தலின்போது பின்வரும் மதிப்பீட்டு முறைகள் இடம்பெறுகின்றன.




இவை மாணவர்களும் ஆசிரியர்களும் தத்தம் கற்றல், கற்பித்தல் முறைகளை மறு ஆய்வு செய்யவும், அவற்றைத் தேவைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளவும் வழிவகுக்கின்றன.

கற்பித்தலும் மதிப்பீடும் குறிப்பிட்ட நோக்கத்துடன் கவனமாகச் செயற்படுத்தப்பட்டால் கற்றல் என்பது அர்த்தமுள்ள அனுபவமாக அமையும். தெளிவான நோக்கத்துடன் பலதரப்பட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி முறைசார்ந்த மதிப்பீட்டையும் முறைசாரா மதிப்பீட்டையும் சமச்சீராக்குவது அவசியம்.

### 6.4.1 ஒரு நிமிட விடைத்தாள்

பாடமுடிவில் ஒவ்வொரு மாணவரையும் வெற்றுத்தாள் ஒன்றினை எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டும். அன்றைய பாடம் தொடர்பான முக்கிய வினா ஒன்றை (இது குறிப்பிட்ட விடையை உடையதாகவோ திறந்த நிலை வகையைச் சேர்ந்ததாகவோ இருக்கலாம்.) எழுப்பி மாணவர்கள் யோசிக்க ஒன்று அல்லது இரண்டு நிமிட கால அவகாசம் கொடுத்த பின்பு வினாவிற்கான விடையை வெற்றுத்தாளில் எழுதச் சொல்லலாம். மாணவர்களது விடைகளை ஆசிரியர் ஆராய்வதன்மூலம் அவர் எதிர்பார்த்தபடி பாடக்கருத்துகளை மாணவர்கள் புரிந்து கொண்டுள்ளனரா என்பதை அறிந்திட முடியும்.

### 6.4.2 பிற மாணவரது ஒப்படைப்பை மதிப்பிடச் செய்தல்

வகுப்பில் கொடுக்கப்படும் ஒப்படைப்புகளை மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தயாரித்துத் தருவர். பிறகு, மாணவர்கள் இணைகளாகப் பிரிக்கப்படுவர். இணையில் உள்ள ஒரு மாணவர், தன்னிடமுள்ள ஒரு பிரதியை ஆசிரியரிடமும் மற்றொன்றினை இணையில் உள்ள மற்றொரு மாணவரிடமும் அளித்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் பிற மாணவரது ஒப்படைப்பை மதிப்பிட்டு அது தொடர்பான கருத்துத்தெரிவிப்பை அளிக்க வேண்டும். இதன்மூலம் மாணவர்களது பாட அறிவு பெருகுவதுடன் ஒரு கருத்தினைப் பல்வேறு கோணங்களில் பார்த்திடும் பயிற்சியும் கிடைக்கிறது.

## 6.5 வேறுபடுத்தப்பட்ட மதிப்பீடு

மாணவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கற்றல் திறனுக்கு ஏற்பப் புதிய அறிவைப் பெறுவதிலும் அதனைத் தத்தம் முன்னறிவோடு தொடர்புபடுத்துவதிலும் தங்கள் கற்றலை வெளிப்படுத்தும் விதத்திலும் வேறுபடுகின்றனர். ஆசிரியர் இவ்வேறுபாடுகளை உணர்ந்து கற்பித்தலை வடிவமைக்கும்போது பொருத்தமான பல்வேறு மதிப்பீட்டு முறைகளையும் கருவிகளையும் தேர்ந்தெடுப்பது அவசியம்.

**ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் அணுகுமுறை மாணவர்கள் அனைவருக்கும் ஏற்புடையதாக அமையாது. அதே போன்று ஒரு குறிப்பிட்ட மதிப்பீட்டு முறை எல்லா மாணவர்களின் கற்றல் திறனையும் தேவைகளையும் அளவிட உதவாது. இவற்றை அளவிட வேறுபடுத்தப்பட்ட மதிப்பீடு பெருந்துணை புரிகிறது.**

இதன்வழித் திரட்டப்படும் தகவல்களைக்கொண்டு ஆசிரியர் தம் கற்பித்தல் முறையை மாற்றியமைத்துக்கொள்வதோடு மாணவர்களின் கற்றலை மேம்படுத்தவும் முடியும்.

முற்றும்

# துணைநூற்பட்டியல்


1. அடைக்கலசாமி, M.R. (1966). இலக்கிய வரலாறு.
   பால்நிலா பதிப்பகம்,
   சென்னை – 600024.

2. ஆனந்தன், சு. (2013). தமிழ் இலக்கிய வரலாறு.
   கண்மணி பதிப்பகம்,
   திருச்சி – 620002.

3. ஞானமூர்த்தி, தா.ஏ. (1990). இலக்கியத் திறனாய்வியல்.
   ஐந்திணைப் பதிப்பகம்,
   சென்னை – 600005.

4. நாகராஜன், கி. (2017). கற்றலும் கற்பித்தலும்.
   ஸ்ரீராம் பதிப்பகம்,
   சென்னை – 600093.

5. பெரியண்ணன், கோ. (2017). கற்றல் மதிப்பீடு.
   வனிதா பதிப்பகம்,
   சென்னை – 600017.

6. வரதராசன், மு. (1968). இலக்கிய மரபு.
   தாயக வெளியீடு,
   சென்னை.

7. வரதராசன், மு. (1987). இலக்கியத் திறன்.
   தாயக வெளியீடு,
   சென்னை

CURRICULUM PLANNING &
DEVELOPMENT DIVISION